

அருப்புக்கோட்டையில் உங்களுடன் ஸ்டாலின் முகாமில் 23 நபர்களுக்கு பட்டா மாறுதல் உத்தரவுகளை வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன் வழங்கினார். உடன் சேர்மன் சுப்பாராஜ், நகர செயலாளர் ஏ.கே.மணி, நெசவாளர் அணி பழனிச்சாமி, ஒன்றியச் செயலாளர் பாலகணேசன், பொன்ராஜ், முன்னாள் எம்.எல்.ஏ. கே.எம்.விஜயக்குமார் ஆகியோர் உடன் இருந்தனர்.



காரியாபட்டி எஸ்.மறைக்குளம் கிராமத்தில் உங்களுடன் ஸ்டாலின் முகாமில் முதியவர்களிடம் கோரிக்கை மனுக்களை நிதி சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு பெற்றார். காரியாபட்டி நகரச் செயலாளர் செந்தில், ஒன்றியச் செயலாளர்கள் கண்ணன், செல்வம் ஆகியோர் உடன் இருந்தனர்.

### கோயம்புத்தூர் மாவட்டத்திற்கான – விரிவான

# ரயில்வே உள்கட்டமைப்பு மற்றும் சேவை மேம்பாட்டுத் திட்டம்!

## நாடாளுமன்ற உறுப்பினர் முனைவர் கணபதி ப.ராஜ்குமார் கடிதம்!



கோவை, ஆக. 30 - கோயம்புத்தூர் மாவட்டத்திற்கான விரிவான ரயில்வே உள்கட்டமைப்பு மற்றும் சேவை மேம்பாட்டுத் திட்டம் குறித்து நாடாளுமன்ற உறுப்பினர் முனைவர் கணபதி ப.ராஜ்குமார் சேலம் கோட்ட ரயில்வே மேலாளருக்கு கடிதை எழுதியுள்ளார்.

அதன் விவரம் வருமாறு:

2024-25 நிதியாண்டில் மாநிலத்தின் மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தியில் (GSDP) சுமார் 12% பங்களிக்கும் தமிழகத்தின் இரண்டாவது பெரிய நகரமான கோயம்புத்தூரில் ரயில்வே உள்கட்டமைப்பு மற்றும் சேவை மேம்பாடுகளுக்கான அவசர மற்றும் மூலோபாயத் தேவைக்கு உங்கள் கவனத்தை ஈர்க்க நான் எழுதுகிறேன்.

வேகமாக வளர்ந்து வரும் அதன் பொருளாதாரம், நகர்ப்புற விரிவாக்கம் மற்றும் அதிகரித்து வரும் பயணிகள் மற்றும் சரக்கு போக்குவரத்து ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு, கோயம்புத்தூர் 2030 ஆம் ஆண்டளவில் ரயில்வே உள்கட்டமைப்பைத் தக்க வைத்து, எதிர்கால வளர்ச்சியைத் தக்கவைக்கத் தகுதியானது. உங்கள் பரிசீலனை மற்றும் தேவையான நடவடிக்கைக்காக நான் பின்வரும் முன்மொழிவுகளை சமர்ப்பிக்கிறேன்:

1. கோயம்புத்தூர் ரயில்வே கோட்டம் மேலோட்டம் (FY 202425 மதிப்பிடப்பட்டுள்ளது)

பயணிகளின் எண்ணிக்கை: 1.2 கோடி,

இயக்கப்படும் ரயில்களின் எண்ணிக்கை: 130

பயணிகள் வருவாய்: ரூ.350 கோடி, சரக்கு வருவாய்: ரூ.300 கோடி, தரவரிசை : தெற்கு ரயில்வே மண்டலத்தில் (தமிழ்நாடு மற்றும் கேரளா) 3வது அதிக வருவாய் ஈட்டும் மாவட்டம்

2. உள்கட்டமைப்பு மேம்பாட்டுத் தேவைகள்

கோயம்புத்தூர் சந்திப்பு மறுசீரமைப்பு : கோவை சந்திப்பு மறுசீரமைப்பு திட்டத்தை விரைவுபடுத்த வேண்டும்.

முன்மொழிவு : விரிவாக்கத்திற்கு வசதியாக, மாற்று ரயில்வே நிலத்திற்கு ஈடாக, தற்போது பொதுத்துறை வங்கிக்கு சொந்தமான நிலத்தை கையகப்படுத்தவும். அதிகரித்து வரும் ட்ராஃபிக்கை நிர்வகிக்க பிளாட்ஃபார்ம்களின் எண்ணிக்கையை 6ல் இருந்து 8 ஆக அதிகரிக்கவும்.

b) ரயில்வே டிப்போ இடமாற்றம்:

தற்போதுள்ள கோச்சிங் டிப்போ மற்றும் பிட் லைன்களை கோயம்புத்தூர் சந்திப்பை குறைக்க பீளமேடு அல்லது ரயில்வேக்கு சொந்தமான மற்றொரு பொருத்தமான நிலத்திற்கு மாற்றவும்.

c) கோவை வடக்கு நிலையத்தின் வளர்ச்சி : இரண்டு கூடுதல் தீவு தளங்களை உருவாக்கவும். மேட்டுப்பாளையம் சாலை வழியாக நுழைவு வெளியேறும் அணுகலுடன் மேற்குப் பகுதியில் ஒரு முனையக் கட்டிடத்தைக் கட்டவும். ரயில் நிறுத்தம் மற்றும் தொடக்க வசதிகளை இயக்கவும்.

ஈ) பீளமேடு கோச் பராமரிப்பு மையம் : பீளமேட்டில் ஆறு பிட்லைன்கள் மற்றும் நவீன கோச்சிங் டிப்போவுடன் கூடிய அதிநவீன ரயில் பராமரிப்பு வசதியை உருவாக்க வேண்டும்.

இ) மல்டிமோடல் லாஜிஸ்டிக்ஸ் பூங்காவில் பங்கேற்பு: கோயம்புத்தூரில் உள்ள கரவாழிமாதாப்பூர் மல்டி மோடல் லாஜிஸ்டிக்ஸ் பூங்காவில் திட்டமிடல் கட்டத்தில் இருந்து இந்திய ரயில்வே NHAI மற்றும் TIDCO உடன் ஒத்துழைக்க வேண்டும். ரயில் சாலை இணைப்பு மற்றும் பொருட்களை கை யாள்வதில் சர்வ தேச சிறந்த நடைமுறைகளை ஏற்றுக்கொள்வது அவசியம்.

f) நான்கு வரி முன்மொழிவு : ஜோலார்பேட்டை-கோயம்புத்தூர் ஷோரனூர் இடையேயான ரயில் பாதையை நான்கு மடங்காக உயர்த்துவது பிராந்திய மற்றும் சரக்கு வழித்தட செயல்திறனுக்கு இன்றியமையாதது. இந்த திட்டத்திற்கு முன்னுரிமை அளிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

3. ரயில் சேவைகள்-மேம்பாடுகள் மற்றும் அறிமுகங்கள்

a) வந்தே பாரத் எக்ஸ்பிரஸ் : கோவை சென்னை வந்தே பாரத் எக்ஸ்பிரஸ் ரயிலை 16 பெட்டிகளாக உயர்த்த வேண்டும். கோயம்புத்தூர் பெங்களூரு வந்தே பாரத் எக்ஸ்பிரஸ் புறப்படும் ரயில் காலை 5:45 மணி வரை நீட்டிக்கப்படலாம். உதய் எக்ஸ்பிரஸ் காலை 7:25 மணிக்கு புறப்படும்படி மாற்றியமைக்கப்படலாம். மங்களூர் மற்றும் திருவனந்தபுரத்திற்கு புதிய வந்தே பாரத் சேவைகள் அதிக தேவை மற்றும் இணைப்பை மேம்படுத்தும்.

b) ஜன் சதாப்தி எக்ஸ்பிரஸ் : மதுரை மற்றும் பழனி வழியாக நாகர்கோவில்-கோவை ஜன் சதாப்தி எக்ஸ்பிரஸ் புதியதாக இயக்கப்பட உள்ளது. இந்த நடைபாதையில் கணிசமான பயணிகள் தேவை மற்றும் பொருளாதார பொருத்தம் உள்ளது.

c) அம்ரித் பாரத் எக்ஸ்பிரஸ் : கோயம்புத்தூரை இணைக்கும் நீண்ட தூர அம்ரித் பாரத் எக்ஸ்பிரஸ் ரயில்கள் அறிமுகம்,

பரௌனி, ஜபல்பூர், சில்சார், பகத் கி கோத்தி இந்த ரயில்கள் புலம்பெயர்ந்த தொழிலாளர்கள், சுற்றுலாப் பயணிகள் மற்றும் தமிழகத்திற்குச் செல்லும் மற்றும் வரும் யாத்ரீகர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யும்.

4. மறுசீரமைப்பு மற்றும் சேவை மேம்பாடுகள்

சேவை மறுசீரமைப்பு : கோயம்புத்தூர் சேலம் கோவை மெமு பயணிகள் ரயில் சேவையை உடனடியாக சீரமைக்க வேண்டும்.

அதிர்வெண் மேம்பாடுகள் : இணைக்கும் வழிகளுக்கு தற்போதைய வாராந்திர சேவைகளை மூன்று வாரத்திற்கு மேம்படுத்தவும், டெல்லி, சென்னை, ராமேஸ்வரம், திருநெல்வேலி தற்போதுள்ள சேவைகளின் விரிவாக்கம் : கோவை - பொள்ளாச்சி காலை நேர விரைவு ரயில் மதுரை வரை நீட்டிக்கப்படலாம். பொள்ளாச்சி வழியாக திருச்செந்தூர் பாலக்காடு எக்ஸ்பிரஸ் ரயில் மேட்டுப்பாளையம் வரை நீட்டிக்கப்படுவதால், பயணிகளின் வருகை அதிகரிக்கும்.

முடிவு மற்றும் கோரிக்கை: மாநில மற்றும் தேசியப் பொருளாதாரத்தில் கோயம்புத்தூரின் கணிசமான பங்களிப்பைக் கருத்தில் கொண்டு, நகர்ப்புற மற்றும் தொழில் துறை தடம் வேகமாக விரிவடைந்து வருவதால், இந்த முன்மொழிவுகள் சரியான நேரத்தில் மற்றும் அவசியமானவை. அவற்றின் செயலாக்கம் பிராந்திய இயக்கம், சரக்கு கையாளுதல் திறன் மற்றும் பொருளாதார வளர்ச்சி ஆகியவற்றை கணிசமாக மேம்படுத்தும். இந்த முன்மொழிவுகளை தயவுசெய்து பரிசீலிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். மற்றும் சாதகமான பதிலை எதிர்பார்க்கிறேன் என்று அக்கடிதத்தில் கூறியுள்ளார்.

### நிவேதா எம்.முருகன் எம்.எல்.ஏ. – எம்.பன்னீர்செல்வம் எம்.எல்.ஏ. முன்னிலை!

# மயிலாடுதுறையில் முதலமைச்சர் கோப்பைக்கான விளையாட்டுப் போட்டிகள்!

## அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் கொடியசைத்து தொடங்கி வைத்தார்!

மயிலாடுதுறை, ஆக. 30 – மயிலாடுதுறை மாவட்டம் மயிலாடுதுறையில் சாய் விளையாட்டு மைதானத்தில் நடைபெற்று வரும் முதலமைச்சர் கோப்பைக்கான விளையாட்டுப் போட்டிகளை பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் பார்வையிட்டு, கபடி, கூடை பந்து, ஓட்டப்பந்தையம் ஆகிய விளையாட்டுகளுக்கான இறுதிப் போட்டிகளை கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

மயிலாடுதுறை சாய் விளையாட்டு மைதானத்தில் நடைபெற்று வரும் முதலமைச்சர் கோப்பைக்கான விளையாட்டுப் போட்டியின் கபடி, கூடை பந்து, ஓட்டப்பந்தையம் ஆகிய விளையாட்டுகளுக்கான இறுதிப்போட்டிகள் தொடக்க நிகழ்ச்சிக்கு மயிலாடுதுறை மாவட்ட ஆட்சி தலைவர் தலைமை தாங்கினார்.

மயிலாடுதுறை மாவட்ட கழகச் செயலாளரும், பூம்புகார் சட்டமன்ற உறுப்பினர் நிவேதா எம்.முருகன், சீர்காழி சட்டமன்ற உறுப்பினர் எம்.பன்னீர்செல்வம் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இந்நிகழ்ச்சியில் பிற்படுத் தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்ய நாதன் பார்வையிட்டு, போட்டிகளை கொடி அசைத்து தொடங்கி வைத்து பேசுகையில்,

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் மூலம் மயிலாடுதுறை மாவட்டத்தில் 2025–2026 ஆம் ஆண்டு முதலமைச்சர் கோப்பை விளையாட்டுப் போட்டிகள் பள்ளி, கல்லூரி, அரசு ஊழியர்கள், மாற்றுத்திறனாளி மற்றும் பொது பிரிவு என 5 பிரிவுகளில் ஆண்கள், பெண்கள் இருபாலரும் பங்கேற்கும் வகையில், 25 வகையான விளையாட்டுகளில் போட்டிகளும், மண்டல அளவில் 7 வகையான விளையாட்டுகளில் போட்டிகளும், 37 வகையான விளையாட்டுகளில் போட்டிகள் மொத்தமாக நடத்தப்பட்டு வருகிறது.

மாவட்ட மற்றும் மண்டல அளவில் விளையாட்டு போட்டிகள் 11.09.2025 அன்று வரை மயிலாடுதுறை சாய் பயிற்சி மைய விளையாட்டரங்கம், குருஞான சம்மந்தர் மிஷன் மெட்ரிகுலேசன் மேல்நிலைப் பள்ளி, ராஜ் மெட்ரிகுலேசன் மேல்நிலைப் பள்ளி, ஷரஃப் பாட்மிண்டன் அகாடமி, ரோட்டரி கிளப் மெட்ரிகுலேசன் பள்ளி, ஏ.வி.சி. கல்லூரி, விவேகானந்தா மெட்ரிகுலேசன் மேல்நிலைப் பள்ளி சீர்காழி, எல்.எம்.சி. மேல்நிலைப் பள்ளி சீர்காழி என பல்வேறு இடங்களில் தடகளம், கூடைப்பந்து, வாலிபால், கால்பந்து, சிலம்பம், கபாடி, செஸ், கேரம், இறகுப்பந்து, மேசைப் பந்து, கைப்பந்து, நீச்சல், வளைகோல் பந்து, கோகோ மற்றும் கிரிக்கெட் ஆகிய போட்டிகள் நடைபெற்று வருகிறது.

இந்த வருடம் மாவட்ட அளவிலான முதலமைச்சர் கோப்பை விளையாட்டு போட்டிக்கு பள்ளி பிரிவில் மொத்தமாக 17,295 மாணவ, மாணவியர்கள் பதிவு செய்துள்ளனர். இதில் 26.8.2025 அன்று பள்ளி ஆண்கள் பிரிவில் சுமார் 6920 பள்ளி மாணவர்களும் மற்றும் 28.08.2025 இன்று பள்ளி பெண்கள் பிரிவில் சுமார் 2180 பள்ளி மாணவிகளும் பங்குபெற்றுள்ளனர்.

மாவட்ட அளவிலான போட்டிகளுக்கு பரிசுத்தொகையாக தனிநபர் மற்றும் குழு போட்டியில் வெற்றி பெறுபவர்களுக்கு முதல் பரிசாக ரூ.3 ஆயிரமும், இரண்டாம் பரிசாக ரூ.2 ஆயிரமும், மூன்றாம் பரிசாக ஆயிரமும் வழங்கப்படுகிறது. மேலும், மாவட்ட அளவிலான முதலமைச்சர் கோப்பை விளையாட்டுகளில் தனிநபர் போட்டியில் முதலிடம் பெறுபவர்களும், குழுப்போட்டியில் தேர்வுக்குழு மூலம் தேர்ந்தெடுக்கப்படும் சிறந்த விளையாட்டு வீரர்களும் மாநில அளவிலான போட்டிக்கு தேர்ச்சி பெறுவார்கள்.

மாநில அளவிலான போட்டிகளுக்கு பரிசுத்தொகையாக தனிநபர் போட்டியில் வெற்றி பெறுபவர்களுக்கு முதல் பரிசாக ரூ.1 இலட்சமும், இரண்டாம் பரிசாக ரூ.75 ஆயிரமும், மூன்றாம் பரிசாக ரூ.50 ஆயிரமும் வழங்கப்படுகிறது. குழு போட்டியில் வெற்றி பெறுபவர்களுக்கு முதல் பரிசாக ரூ.75 ஆயிரமும், இரண்டாம் பரிசாக ரூ.50 ஆயிரமும், மூன்றாம் பரிசாக ரூ.25 ஆயிரமும் வழங்கப்படுகிறது.

இவ்வாறு அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் பேசினார்.

நிகழ்ச்சியில், தகவல் தொழில்நுட்ப அணி மாநில துணைச் செயலாளர் பி.எம்.ஸ்ரீதர், மாநில விவசாய அணி இணைச் செயலாளர் ஜெக.வீரபாண்டியன், தலைமைச் செயற்குழு உறுப் பினர்கள் இராம.இளங்கோவன், ஜி.என்.ரவி, மாவட்ட கழக துணைச் செயலாளர்கள் மு.ஞானவேலன், எஸ்.செல்வமணி, மாவட்டப் பொருளாளர் மகா.அலெக்சாண்டர், ஒன்றியச் செயலாளர்கள் ஏ.ஜி.ஜெ.பிரபாகர், மங்கை எம்.சங்கர், என்.இளையபெருமாள், ஏ.ஆர்.ராஜா, பஞ்சுகுமார், எம்.அப்துல்மாலிக், அமிர்த.விஜயகுமார், கு.வைத்தியநாதன், குண்டா மணி ( எ ) என்.செல்வராஜ், ம.சுப்பராயன், ஹர்ஷத், நத்தம் ஏ.வின்சென்ட், பி.கென்னடி, அ.காந்தி, எம்.கே.மருது, அறிவு (எ) அறிவுசெல்வன், கபடி கழக ரஜினி மற்றும் கழகப் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.


ஆழ்ந்த இரங்கல்

மேனாள் நகர மன்ற தலைவர்
மாவட்ட கழக பொருளாளர் - தி.மு.க
இரா.ஜனகராஜ் B.Sc.,
அவர்களின் தந்தை



T.இராஜாமணி அவர்கள்

நேற்று முன்தினம் 28.08.2025 வியாழக்கிழமை மாலை 7.00 மணியளவில் இயற்கை எய்தினார்.
அன்னாரது இறுதி ஊர்வலம் நேற்று 29.08.2025 வெள்ளிக்கிழமை மாலை 5.00 மணியளவில் அவர்களது இல்லம் (அம்மச்சார் அம்மன் கோயில் தெரு மந்தக்கரை) நடைபெறும் என்பதை ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

வருத்தமுடன்

முனைவர் க.பொன்முடி M.A.,Ph.D.,B.L.,MLA.,
கழக உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினர் - திருக்கோவிலூர் சட்டப்பேரவை உறுப்பினர்

டாக்டர் பொன்.கௌதமசிகாமணி MS.(Ortho) Ex.MP
விழுப்புரம் தெற்கு மாவட்ட கழக பொறுப்பாளர்

டாக்டர் இரா.இலட்சுமணன் M.B.B.S.D.Ortho.,MLA.,
விழுப்புரம் மத்திய மாவட்ட கழக பொறுப்பாளர்

இரா.சக்கரை
நகர கழக செயலாளர்

இரா.ச.தமிழ்ச்செல்விபிரபு MBA.,
நகர மன்ற தலைவர்

விழுப்புரம் நகர தி.மு.க - மேற்கு


### மயிலை த.வேலு எம்.எல்.ஏ. தலைமையில் - சென்னை தென்மேற்கு மாவட்ட

# அமைப்புசாரா ஓட்டுநர் அணி புதிய நிர்வாகிகள் அறிமுகக் கூட்டம்!

## மாவட்ட அமைப்பாளர் மயிலை ஏ.சத்தியமூர்த்தி அறிக்கை!

சென்னை, ஆக. 30 - சென்னை தென்மேற்கு மாவட்ட அமைப்புசாரா ஓட்டுநர் அணி புதிய நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் நடைபெறுகிறது.

இது குறித்து மாவட்ட அமைப்பாளர் மயிலை ஏ.சத்தியமூர்த்தி விடுத்துள்ள அறிக்கை வருமாறு;

சென்னை தென்மேற்கு மாவட்டச் செயலாளர் மயிலை த.வேலு எம்.எல்.ஏ. தலைமையில் சென்னை தென்மேற்கு மாவட்ட அமைப்புசாரா ஓட்டுநர் அணி மாவட்டதிற்கு உட்பட்ட மயிலை பகுதி கிழக்கு,மேற்கு, தியாகராயர் நகர் பகுதி கிழக்கு, மேற்கு புதியதாக நியமிக்கப் பட்டுள்ள பகுதி அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் அறிமுக கூட்டம் இன்று ( 30.8.2025 -சனிக்கிழமை ) காலை 10.00 மணியளவில், மயிலை சட்டமன்ற உறுப்பினர் அலுவலகத்தில் நடைபெறுகிறது.

இதில் மாவட்ட தலைவர், துணை தலைவர், மாவட்டத் துணை அமைப்பாளர்கள், பகுதி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு மாவட்ட அமைப்பு சாரா ஓட்டுநர் அணி அமைப்பாளர் மயிலை ஏ.சத்தியமூர்த்தி அறிக்கை விடுத்துள்ளார்.



திருச்செந்தூர் வட்டம் உடன்குடி மேற்கு ஒன்றியம் மாதவன் குறிச்சியில் சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியில் இருந்து ரூ 17 லட்சம் மதிப்பில் தான்டவன் காட்டில் கட்டப்பட உள்ள 30000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிக்கு மீன் வளம் மீனவர் நலன் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அனிதா ஆர் ராதா கிருஷ்ணன் அடிக்கல் நாட்டினார். உடன் மாநில வர்த்தக அணி இணைச் செயலாளர் எஸ்.ஆர்.எஸ்.உமரி சங்கர், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் பை.மூ.ராமஜெயம், ஒன்றிய செயலாளர் பாலசிங், இளங்கோ, அறங்காவலர் குழு தலைவர் கண்ணன், மாவட்டப் பிரதிநிதி தன்ராஜ், தொழில் அதிபர் கார்த்தி கேயன் மற்றும் பொது மக்கள் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.